பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

02 04 2024 **TUESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. அருணாச்சலப்பிரதேசத்தில் உள்ள இடங்களின் பெயர்களை மாற்றம் செய்து சீனா மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

2. மக்களவை தேர்தலை ஒட்டி, நாடு முழுவதும் அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

3. சத்தீஸ்கர் மாநிலத்தில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது நான்கு மாவோயிஸ்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

4. **Al Jazeera** உள்ளிட்ட சில ஊடகங்களை தடை செய்வதற்கான அதிகாரத்தை இஸ்ரேல் அரசுக்கு வழங்கும் வகையிலான சட்டத்திற்கு அந்நாட்டு நாடாளுமன்றம் ஒப்புதல் தெரிவித்துள்ளது.

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள போட்டியில், பெங்களூரு அணி – லக்னோவை எதிர்கொள்கிறது.

*----- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>

அருணாச்சலப்பிரதேசத்தில் உள்ள இடங்களின் பெயர்களை மாற்றம் செய்து சீனா மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, பேசிய வெளியுறவு செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், பெயர்களை மாற்றம் செய்வதால் அருணாச்சலப்பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்பதை மாற்றிவிட முடியாது என்று தெரிவித்துள்ளார்.

அருணாச்சலப்பிரதேசம் தொடர்பான சீனாவின் அண்மைகால செயல்பாடுகள் காரணமாக இந்தியா இந்த கருத்தை வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், குஜராத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று பேசிய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், அருணாச்சலப்பிரதேசம் எப்போதும் இந்தியாவின் ஒரு பகுதியாக விளங்கும் என்று தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

<<<<<<>>>>>

மக்களவை தேர்தலை ஒட்டி, நாடு முழுவதும் அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

பிஜேபி-யின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி உத்தராகண்ட் மாநிலம் ருத்ரபூரில் நடைபெறும் பேரணி ஒன்றில் இன்று பங்கேற்கிறார்.

நைனிடால், உதம்சிங் நகர் மக்களவைத் தொகுதி பிஜேபி வேட்பாளர் திரு அஜய் பட்-ஐ ஆதரித்து அவர் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

இந்த தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக திரு பிரகாஷ் ஜோஷி போட்டியிடுகிறார்.

வரும் 19-ஆம் தேதியன்று நடைபெறும் மக்களவை முதல்கட்ட தேர்தலின்போது, இம்மாநிலத்தில் ஐந்து மக்களவைத் தொகுதிகளில் தேர்தல் நடைபெறவுள்ளது.

உத்தராகண்டையடுத்து, ராஜஸ்தானில் நடைபெறும் பிஜேபி கூட்டத்தில் திரு நரேந்திர மோடி இன்று பிற்பகல் பங்கேற்கிறார்.

பிஜேபி மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு அமித் ஷா, இன்று பெங்களுருவில் நடைபெறும் பிஜேபி கூட்டத்தில் கலந்துகொள்கிறார்.

தமிழகத்தில் அனைத்து தொகுதிகளிலும் அரசியல் கட்சித் தலைவர்கள் தொடர் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவரும், மத்திய இணையமைச்சருமான திரு எல். முருகன், மேட்டுப்பாளையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசினார்.

அப்போது, கச்சத்தீவு விவகாரத்திற்கு காங்கிரஸ் மற்றும் திமுக கூட்டணி அரசே முழு காரணம் என்று அவர் தெரிவித்தார்.

கிருஷ்ணகிரியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பஙகேற்று பேசிய தமிழக காங்கிரஸ் கமிட்டித்தலைவர் திரு செல்வப்பெருந்தகை, கடந்த பத்தாண்டுகளாக தேர்தல் வாக்குறுதிகள் எதையும் பிஜேபி நிறைவேற்றவில்லை என்று குற்றம் சாட்டினார்.

இதனிடையே, 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி, தேர்தல் ஆணையம் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி பள்ளி மாணவர்கள் பங்கேற்ற மினி மாரத்தான் போட்டி நடைபெற்றது.

அப்போது, அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தி, அண்ணா விளையாட்டு அரங்கத்தில் நிகழ்ச்சி ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற இளம் வாக்காளர்கள், அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்று தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் - வாக்காளர்கள் - 30 செகண்ட்ஸ்)*

பெரம்பலூர் மாவட்டத்தில், முதல் முறை வாக்காளர்களை ஊக்குவிக்கும் வகையில், பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் ஒருபகுதியாக, முதல் முறையாக வாக்களிப்பது குறித்து மாணவி ஒருவர் எமது செய்தியாளரிடம் தமது கருத்தினை தெரிவித்தார்.

**<<<<<<>>>>>**

மக்களவை தேர்தலை ஒட்டி பல்வேறு தொகுதிகளைப் பற்றி அறிந்து கொள்ளும் ‘தொகுதி அலசல்’ தொகுப்பில் ஸ்ரீபெரும்புதூர் மக்களவைத் தொகுதி குறித்து எமது செய்தியாளர் தரும் தகவல் . . ..

(வாய்ஸ் பைட் - சுரேகா - 68 செகண்ட்ஸ்)

**<<<<<<>>>>>**

சத்தீஸ்கர் மாநிலம் கங்கலூர் பகுதியில் நான்கு மாவோயிஸ்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

பஸ்தர் மண்டலத்தில், இன்று காலை பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது இந்த மோதல் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அவர்களிடமிருந்து, இயந்திர துப்பாக்கி உட்பட ஆயுதங்கள் மற்றும் வெடிப்பொருட்களை பாதுகாப்புப்படையினர் கைப்பற்றினர்.

**<<<<<<>>>>>**

அமர்நாத் யாத்திரையை சுமூகமாக நடத்துவதற்கான முன்னேற்பாடுகள் குறித்து ஜம்மு காஷ்மீர் தலைமைச்செயலாளர் திரு **Atal Duloo** ஆய்வு மேற்கொண்டார்.

அமர்நாத் தேவஸ்தான வாரியம், எல்லைப்புற சாலைகள் அமைப்பு, இந்திய வானிலை ஆய்வு மையம், பேரிடர் மீட்பு அமைப்புகள், தொலைத்தொடர்பு சேவை நிறுவனங் கள் ஆகியவற்றை சேர்ந்த அதிகாரிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

யாத்ரீகர்கள் சிரமமின்றி பயணம் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<<>>>>>**

**Al Jazeera** உள்ளிட்ட சில தொலைக்காட்சி சானல்களை தடை செய்வதற்கான அதிகாரத்தை இஸ்ரேல் அரசுக்கு வழங்கும் வகையிலான சட்டத்திற்கு அந்நாட்டு நாடாளுமன்றம் ஒப்புதல் தெரிவித்துள்ளது.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக விளங்கும் காரணத்தால் தற்காலிகமாக அவை தடை செய்யப்பட்டுள்ளதாக இஸ்ரேல் அரசு கூறியுள்ளது.

வரும் ஜூலை மாதம் இறுதிவரை அல்லது காஸாவில் போர் முடிவுக்கு வரும் வரை இந்த சட்டம் அமலில் இருக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

இதையடுத்து, இஸ்ரேலில் உள்ள **Al Jazeera** அலுவலகத்தை உடனடியாக மூடுவதற்கு அந்நாட்டு பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகு உத்தரவிட்டுள்ளார்.

வெளிநாடுகளை சேர்ந்த செய்தியாளர்கள் காஸாவில் நுழைவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தங்களது நிறுவனத்தை சேர்ந்த பத்திரிகையாளர்களை குறிவைத்து இஸ்ரேல் குற்றம் சாட்டி வருவதாக **Al Jazeera** நிறுவனம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

காங்கோ நாட்டின் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள **Judith Suminwa Tuluka** ஆப்பிரிக்க கண்டத்தின் முதலாவது பெண் பிரதமர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

அந்நாட்டு அதிபர் **Felix Tshisekedi** அவரை பிரதமராக நியமனம் செய்து உத்தரவிட்டுள்ளார்.

கனிம வளங்களை நிர்வகிப்பது, அந்நாட்டின் கிழக்கு பகுதியில் நடைபெற்றுவரும் மோதல்களை சரிபடுத்துவது உள்ளிட்டவற்றை தற்போது பதவியேற்றுள்ள புதிய அரசு எதிர்கொண்டுவருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

இமயமலையின் மேற்குப்பகுதியில் அடுத்த ஏழு நாட்களுக்கு லேசானது முதல், மிதமானது வரை மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாட்டின் வடமேற்கில் உள்ள சில பகுதிகளில், வரும் ஐந்தாம் தேதிவரை லேசானது முதல், மிதமானது வரை மழை இருக்கக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

ஜம்மு காஷ்மீர், லடாக் மற்றும் இமாச்சலப்பிரதேசத்தில் அடுத்த மூன்று நாட்களுக்கு இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, ஆந்திரப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் வெப்பம் மற்றும் ஈரப்பதமான வானிலை நிலவும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பெங்களூரு அணி – லக்னோவை எதிர்கொள்கிறது.

இப்போட்டி பெங்களூருவில் இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

-------------

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் ஒடிஷா இன்று பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

புவனேஸ்வரில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

--------------

அமெரிக்காவின் ஹூஸ்டன் நகரில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - விஜய் சுந்தர் பிரசாந்த் இணை காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

------------

மெக்சிகோ சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் தகுதி சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் நிக்கி கலியந்தா தோல்வியடைந்தார்.

<<<<<<>>>>>